வணக்கம்

ஆகாஷ்வாணி-புதுச்சேரி

மாநிலச் செய்திகள்

வாசிப்பவர் : செங்கேணி பழனி

தேதி 11.01.2026 நேரம் மாலை 6.10 மணி

---

தலைப்புச் செய்திகள்

நாட்டை பிளவுப்படுத்த சதி செய்யும் அனைத்து சக்திகளையும் தோற்கடிக்க, அனைவரும் ஒற்றுமையுடன் இருக்க வேண்டும் என்று பிரதமர் திரு. நரேந்திர மோடி நாட்டு மக்களுக்கு அழைப்பு விடுத்துள்ளார்.

இந்தியாவில், உள்கட்டமைப்பு, உலகதரம் வாய்ந்ததாக மேம்படுத்தப் பட்டுள்ளதாக, திருவனந்தபுரத்தில் நடைபெற்ற மிஷன் 2026 மாநாட்டில் மத்திய உள்துறை அமைச்சர் திரு அமித் ஷா கூறியுள்ளார்.

புதுடெல்லியில் இன்று காலை நடைபெற்ற 56ஆவது Fit india நிகழ்ச்சியில், மத்திய இளைஞர் நலன் மற்றும் விளையாட்டுத் துறை அமைச்சர் டாக்டர் மன்சுக் மாண்டவியா பங்கேற்றார்.

EOS N1 புவி கண்காணிப்பு செயற்கைக் கோள், PSLV C-62 ராக்கெட் மூலம் விண்ணில் செலுத்துவதற்கான 24 மணி நேர கவுண்ட் டவுன், தற்போது நடைபெற்று வருகிறது.

---

மோடி குஜராத் 1 (7)

நாட்டை பிளவுப்படுத்த சதி செய்யும் அனைத்து சக்திகளையும் தோற்கடிக்க, அனைவரும் ஒற்றுமையுடன் இருக்க வேண்டும் என்று பிரதமர் திரு. நரேந்திர மோடி நாட்டு மக்களுக்கு அழைப்பு விடுத்துள்ளார்.

3 நாள் பயணமாக குஜராத் மாநிலம் சென்றுள்ள அவர், இன்று காலை

சோம்நாத் கோவிலை பாதுகாக்க, உயிர் தியாகம் செய்த எண்ணற்ற வீரர்களை கவுரவிக்கும் வகையில் நடைபெற்ற சௌரிய யாத்திரையில் பங்கேற்றார். பிரதமரின் இந்த பயணம் குறித்த கூடுதல் தகவல்கள்…..

(வாய்ஸ்)

*மோடி குஜராத்* 2 (19)

(வாய்ஸ்)

குஜராத் மாநிலத்தில் உள்ள பிரபாஸ் பட்டனத்தில் இன்று நடைபெற்ற, சோமநாதர் சுயமரியாதை விழாவில், பிரதமர் திரு. நரேந்திர மோடி கலந்து கொண்டு உரையாற்றினார். நிகழ்ச்சியில் பேசிய பிரதமர், நமது கடந்த காலத்துடன் ஆழமான தொடர்பை பேணிக் காத்து, வளர்ந்த பாரதம் என்ற இலக்கிற்காக அனைவரும், தோளோடு தோள் நின்று, மனதோடு மனம் ஒன்றி, முன்னேற வேண்டும் என்று நாட்டு மக்களை கேட்டுக் கொண்டார். சோமநாதர் சுயமரியாதை விழாவை, நம்பிக்கை மற்றும் பக்தியின் பிரதிபலிப்பு என்று வர்ணித்த பிரதமர், இந்த விழா, வெறும் வரலாற்று பெருமையின் கொண்டாட்டம் மட்டுமல்லாமல், சோமநாதர் ஆலயத்தின், காலத்தால் அழியாத பயணத்தை, எதிர்கால தலைமுறையினருக்கு உயிர்ப்புடன் வைத்திருக்க உதவும் ஒரு சிறந்த தூண்டுகோலாக விளங்கிறது என்று கூறினார். இந்திய நாகரீகத்தின் விழுமியங்களை வலியுறுத்திய அவர், நமது நாகரீகம், ஒரு சமச்சீரான வாழ்க்கையை வாழவே கற்றுத் தருகிறது என்றும், அன்பின் பரிமாற்றத்தையும் கொண்டுள்ளது என்றும் பாராட்டினார். கஜனி முதல்

ஔரங்சீப் வரையிலான தொடர்ச்சியான படையெடுப்புகளுக்கு பிறகு, ஆலயத்தின் வரலாற்று சிறப்புமிக்க புனரமைப்புப் பயணத்தை நினைவு கூர்ந்த பிரதமர், சோமநாதர் ஆலயம் எப்படி மீண்டும், மீண்டும் புனரமைக்கப்பட்டது என்பதை நினைவு கூர்ந்தார். ஆலயத்திற்காக

*மோடி குஜராத்* 3 (5)

அனைத்தையும் தியாகம் செய்தவர்களுக்கு முக்கியத்துவம் அளிக்கப்படவில்லை என்றும், அவர்களின் கதைகள், வரலாற்றில் இடம்பிடிக்கவில்லை என்றும் பிரதமர் வருத்தம் தெரிவித்தார். மேலும், இந்த யாத்திரையில் குஜராத் முதலமைச்சர் திரு. பூபேந்திர பட்டேல், துணை முதலமைச்சர் திரு. ஹர்ஷ் சங்வி, ஆகியோரும் கலந்து கொண்டனர்.

---------------------------

*சிபி ராதாகிருஷ்ணன்* (12)

முன்னாள் பிரதமர் லால் பகதூர் சாஸ்திரியின் நினைவு நாளை ஒட்டி, இன்று, குடியரசுத் துணைத் தலைவர் மாளிகையில் உள்ள அவரது திருவுருவப் படத்திற்கு குடியரசுத் துணைத் தலைவர் திரு. சி.பி. ராதாகிருஷ்ணன், மலரஞ்சலி செலுத்தினார். முன்னாள் பிரதமர் சாஸ்திரி, ஒரு தொலை நோக்குப் பார்வை கொண்ட தலைவர் என்றும், அவரது வாழ்க்கை, எளிமை, நேர்மை, மற்றும், தேசத்தின் மீதான அசைக்க முடியாத அர்ப்பணிப்புக்கு ஒரு எடுத்துக் காட்டாக திகழ்ந்தது என்றும், குடியரசுத் துணைத் தலைவர் தமது சமூக ஊடகப் பதிவில் குறிப்பிட்டுள்ளார். லால்பகதூர் சாஸ்திரியின் காலத்தால் அழியாத ஜெய் ஜவான்-ஜெய்கிசான்

என்ற முழக்கம், நாட்டின் வீரர்கள், மற்றும், விவசாயிகள் மீது அவர் கொண்டிருந்த ஆழ்ந்த மரியாதையை பிரதிபலித்து, இளம் தலைமுறையினரை ஊக்குவிக்கிறது என்றும், திரு. சி.பி. ராதாகிருஷ்ணன் கூறியுள்ளார்.

---------------------------

*அமித் □ா* (11)

மத்திய உள்துறை அமைச்சர் திரு. அமித் ஷா, இன்று காலை, கேரள மாநிலம் திருவனந்தபுரத்தில் மிஷன் 2026-ஐ தொடக்கி வைத்தார். திருவனந்தபுரம் கௌடியாரில் உள்ள, உதய் அரண்மனை மாநாட்டு மையத்தில், உள்ளாட்சி அமைப்புகளுக்கு தேர்ந்தெடுக்கப்பட்ட பிஜேபி உறுப்பினர்களின் மாநில மாநாட்டில் உரையாற்றிய அவர், வளர்ந்த கேரளாவை உருவாக்க, பிஜேபி செயல்பட்டு வருவதாகவும், அந்த இலக்கை அடைய, மாநிலத்தில் பிஜேபி அரசு அமைப்பதை நோக்கமாக கொண்டு, இந்த மாநாட்டிற்கு ஏற்பாடு செய்யப் பட்டுள்ளது என்றும் கூறினார். பிரதமர், ஒரு சமச்சீரான வளர்ச்சி மாதிரியை முன் வைத்துள்ளதாகவும், இந்தியாவில், உள்கட்டமைப்பு, உலகதரம் வாய்ந்ததாக மேம்படுத்தப் பட்டுள்ளதாகவும் திரு. அமித் ஷா கூறினார்.

---------------------------

*மன்சுக் மாண்டவியா* (19)

புதுடெல்லியில் இன்று காலை நடைபெற்ற 56ஆவது Fit india சைக்கிள் ஓட்டும் நிகழ்ச்சியில், மத்திய இளைஞர் நலன் மற்றும் விளையாட்டுத் துறை அமைச்சர் டாக்டர் மன்சுக் மாண்டவியா

பங்கேற்றார். மதிப்பு மிக்க, வளர்ச்சி அடைந்த இந்தியா என்னும் இளம் தலைவர்கள் உரையாடல் நிகழ்ச்சியில் கலந்து கொள்வதற்காக, நாடு முழுவதிலும் இருந்து, இளம் தலைவர்கள் பங்கேற்றனர். இந்திய டென்னிஸ் வீரர் லியாண்டர் பயஸ், புகழ்பெற்ற பேட்மிண்டன் வீரர் புல்லேலா கோபிசந்த் ஆகியோரும், இதில் கலந்து கொண்டனர். நிகழ்ச்சியில் உரையாற்றிய டாக்டர் மன்சுக் மாண்டவியா, சைக்கிள் ஓட்டுதல் சமநிலையை கற்பிக்கிறது என்றும், தலைமைத்துவத்தில், சமநிலை அவசியம் என்றும் வலியுறுத்தினார். சைக்கிள் ஓட்டுவது, இளைஞர்கள் பொறுமையாகவும், நிதானமாகவும் செயல்பட வேண்டும் உதவுகிறது என்று கூறிய அவர், ஆரோக்கியமான இளைஞர்கள், நாட்டின் வளர்ச்சியை வழிநடத்த முக்கிய பங்கு வகிப்பதாகவும் தெரிவித்தார். இன்று நாட்டின் இளைஞர்கள் 15 ஆயிரத்திற்கும் மேற்பட்ட இடங்களில், ஞாயிற்றுக் கிழமைகளில் சைக்கிள் ஓட்டுதல் மூலம் உடற்தகுதி பற்றிய செய்தியை பரப்பி வருவதாகவும், கடந்த ஆண்டு தொடக்கப்பட்ட இந்த முயற்சி, தற்போது, இந்தியா முழுவதும் 240 இடங்களில் செயல்படுத்தப்பட்டு வருவதாகவும் கூறினார்.

---------------------------

*ஜெய்சங்கர் (20)*

மத்திய வெளியுறவுத் துறை அமைச்சர் டாக்டர் ஜெய்சங்கர், பிரான்ஸ் மற்றும் லக்சம்பர்க் நாடுகளுக்கான தனது பயணத்தை, நிறைவு செய்துள்ளார். தனது பயணத்தின் போது அவர், பிரான்ஸ் அதிபர் திரு. இமானுவேல் மேக்ரோனை சந்தித்து, இருதரப்புப் பேச்சு வார்த்தை

நடத்தினார். இந்த சந்திப்பின் போது, இரு நாடுகளுக்கு இடையே, புதுமை, மற்றும், தொழில்நுட்பம், ஸ்டார்ட்-அப்-கள், சுகாதாரம், மற்றும், கல்வி ஆகியவை குறித்து விவாதிக்கப்பட்டது. பாதுகாப்பு, விண்வெளி, சிவில், அணுசக்தி, மற்றும், கடல்சார் பாதுகாப்பு ஆகிய முக்கிய துறைகளில் வளர்ந்து வரும் ஒத்துழைப்பு குறித்தும், இரு தலைவர்களும் விவாதித்தனர். பிரான்ஸ் தூதர்களின் 31ஆவது மாநாட்டில் சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டு உரையாற்றிய டாக்டர் ஜெய்சங்கர், உலகின் சமகால, உலகளாவிய, மாற்றங்களை சுட்டிக் காட்டினார். மேலும், இம்மாநாட்டில் கௌரவ விருந்தினராக கலந்து கொண்ட, முதல் ஐரோப்பியர் அல்லாத வெளியுறவு அமைச்சர் டாக்டர் ஜெய்சங்கர் என்பது குறிப்பிடத்தக்கது. லக்சம்பர்க்கில், அந்நாட்டு பிரதமர் திரு. லூக் ஃபிரீடனை சந்தித்த டாக்டர் ஜெய்சங்கர், அரசியல் ஒத்துழைப்பு, வர்த்தகம், முதலீடு, டிஜிட்டல் தொழில்நுட்பங்கள், விண்வெளி, மற்றும், உலகளாவிய முன்னேற்றங்கள் குறித்து, இந்தியா-லக்சம்பர்க் நாடுகளுக்கு இடையே உள்ள உறவுகள் குறித்து விவாதித்தார். லக்சம்பர்க்கின் முன்னேற்றத்தில் இந்திய சமூகத்தினரின் பங்கேற்பையும் அவர் எடுத்து கூறினார்.

---------------------------

*பிரகதி- ஜபல்பூர் 1 (10)*

முக்கிய உள்கட்டமைப்பு திட்டங்களின் அமலாக்கத்தில், மத்திய-மாநில அரசுகளுக்கு இடையிலான ஒருங்கிணைப்பு மூலம் குறைகளை உடனுக்குடன் களைந்து, திட்டங்கள், குறித்த நேரத்தில் நிறைவேற்றி முடிக்கப்படுவதை உறுதிப்படுத்த, பிரதமர் திரு நரேந்திர மோடியின்

எண்ணத்தில் உருவாகி வடிவமைக்கப்பட்ட, பிரகதி தொழில் நுட்ப வசதி, இதுவரை, 50 கூட்டங்களை வெற்றிகரமாக நடத்தி, புதிய மைல்கல் ஒன்றை எட்டி உள்ளது. பிரதமரின் நேரடி மேற்பார்வையின் கீழ் செயல்படும் பிரகதி வசதி மூலம் கண்காணித்து நிறைவேற்றப்பட்ட ஜபல்பூர் – கோண்டியா அகலப் பாதை மாற்றத் திட்டம் குறித்து, இன்று இந்த சிறப்புத் தொகுப்பில் காண்போம்…..

(வாய்ஸ்)

*பிரகதி- ஜபல்பூர்* 2 (18)

(வாய்ஸ்)

ஜபல்பூர்-கோண்டியா அகலப் பாதை மாற்றத் திட்டம் சுமார் 285 கிலோ மீட்டர் தூரத்தை கொண்டதாகும். நாட்டின் மத்திய பகுதியில் ரயில்வே திறனையும், செயல்பாட்டு நெகிழ்வுத் தன்மையையம்,வலுப்படுத்தும் நோக்கில் சுமார் ஆயிரத்து 991 கோடி ரூபாய் செலவில் இந்த திட்டம் அங்கீகரிக்கப் பட்டுள்ளது. இந்த திட்டத்தில் பாலாகாட்-கடங்கி பிரிவு உட்பட, முன்பிருந்த குறுகிய பாதை, அகலப் பாதையாக மாற்றப் பட்டுள்ளது. இதன்மூலம் போக்குவரத்து நெரிசல் மிகுந்த பல ரயில் தடங்களுக்கு, ஒரு மாற்றுப் பாதை உருவாக்கப் பட்டது. மத்திய பிரதேசம், மற்றும், மஹாராஷ்ட்ரா மாநிலங்கள் வழியாக செல்லும், இந்த வழித்தடம், குறிப்பிடத்தக்க விவசாய உற்பத்தி, வன அடிப்படையிலான செயல்பாடுகள் மற்றும், கணிம போக்குவரத்து உள்ள மாவட்டங்களுக்கு சேவை செய்கிறது. இந்த திட்டம் தொடர்ச்சியான சுற்றுச் சூழல் மற்றும், ஒருங்கிணைப்பு தொடர்பான சவால்களை

எதிர்கொண்டது. மார்ச் 2016- ல் இந்த திட்டம் பிரகதி திட்டத்தின் கீழ் கொண்டு வரப்பட்டது. இந்த ஆய்வு, காலக்கெடுவுக்கள் வனத்துறை அனுமதிகளை பெறுதல், மத்திய பிரதேச அரசால் நிலத்தை விரைவாக மாற்றுதல், மற்றும், ரயில்வே, சாலை போக்குவரத்து, நெடுஞ்சாலைகள், சுற்றுச் சூழல், வனம், மற்றும் கால நிலை மாற்ற அமைச்சகங்களுக்கு

*பிரகதி- ஜபல்பூர் 3 (10)*

இடையே, நெருங்கிய ஒருங்கிணைப்பு ஆகியவற்றின் முக்கியத்துவத்தை வலியுறுத்தியது. பிரகதி திட்டத்தின் கீழ் இந்த திட்டம் கொண்டுவரப் பட்டதால், துறைகளுக்கு இடையேயான, பொறுப்புகள் வலுப்படுத்தப்பட்டுள்ளது. சுற்றுச் சூழல், மற்றும், நிலம் தொடர்பான தடைகள் நீக்கப்பட்ட நிலையில், மார்ச் 2021-ல், ஜபல்பூர்-கோண்டியா அகலப்பாதை வழித்தடம் முழுமையாக செயல்பாட்டிற்கு வந்தது. இது 100 சதவிகித பௌதீக முன்னேற்றத்தை அடைந்து, மாற்று ரயில்ப் பாதையின் செயல்பாட்டு பலன்களை வழங்கி உள்ளது. ஜபல்பூர்-கோண்டியா அகலப் பாதை மாற்றத் திட்டம், ஒருங்கிணைந்த நிர்வாகம், மற்றும், ரயில் உள்கட்டமைப்பை எவ்வாறு சிறப்பாக வழங்க முடியும் என்பதை விளக்குகிறது.

---------------------------

PSLV (9)

பாதுகாப்பு ஆராய்ச்சி மேம்பாட்டு நிறுவனம் தயாரித்த EOS N1 புவி கண்காணிப்பு செயற்கைக் கோள், ஸ்ரீஹரிகோட்டா சதீஷ் தவான் விண்வெளி மையத்தில், நாளைக் காலை 10.17 மணிக்கு PSLV C-62

ராக்கெட் மூலம் விண்ணில் செலுத்துவதற்கான 24 மணி நேர கவுண்ட் டவுன், தற்போது நடைபெற்று வருகிறது. EOS N1 செயற்கைக் கோளுடன் வெளிநாடுகளைச் சேர்ந்த துணை செயற்கைக் கோள்களும் விண்ணில் செலுத்தப்படுகின்றன. இதையொட்டி, பாதுகாப்பு காரணங்களுக்காக திருவள்ளூர் மாவட்ட மீனவர்கள், நாளை கடலுக்கு செல்ல தடை விதித்து, மீன்வளத் துறை உத்தரவிட்டுள்ளது.

---------------------------

*புத்தக கண்காட்சி* (9)

மத்திய கல்வி அமைச்சர் திரு. தர்மேந்திர பிரதான், புதுடெல்லி பாரத் மண்டபத்தில் இன்று, 53ஆவது சர்வதேச புத்தக கண்காட்சியை, தொடக்கி வைத்தார். இந்திய ராணுவ வரலாறு, வீரம் மற்றும் விவேகம் என்ற இந்த ஆண்டின் கருப்பொருளுடன் நடைபெறும் இந்த கண்காட்சியில், கலை-கலாச்சாரம், திரைப்படம், குழந்தைகள் இலக்கியம் உள்ளிட்ட பல்வேறு தலைப்புகளில், 35க்கும் மேற்பட்ட நாடுகளில் இருந்து ஆயிரக்கணக்கான புத்தகங்கள் காட்சிக்கு வைக்கப் பட்டுள்ளன. வரும் 18ஆம் தேதி வரை நடைபெறும் இந்த கண்காட்சியில், 6 ஆயிரத்திற்கும் மேற்பட்ட புத்தகங்களை வாசிப்பதற்கான தேசிய மின்னணு நூலகமும் அறிமுகப் படுத்தப்பட்டுள்ளது.

---------------------------

*கிரிக்கெட்* (7)

வதோதராவில், இந்தியாவிற்கு எதிரான முதலாவது ஒருநாள் சர்வதேச கிரிக்கெட் போட்டியில், டாஸ் வென்ற இந்திய அணியால்

முதலில் ஆடப் பணிக்கப்பட்ட நியூசிலாந்து அணி, சற்று முன் வரை, ---- ஓவரில், ---- விக்கெட் இழப்பிற்கு, ----- ரன் எடுத்துள்ளது. 3 போட்டிகள் கொண்ட இத் தொடரின் 2ஆவது போட்டி, வரும் 14ஆம் தேதி ராஜ்கோட்டிலும், 3 ஆவது மற்றும் இறுதிப் போட்டி, வரும் 18ஆம் தேதி இந்தோரிலும் நடைபெற உள்ளது.

---------------------------

*மீண்டும் தலைப்புச் செய்திகள்*

நாட்டை பிளவுப்படுத்த சதி செய்யும் அனைத்து சக்திகளையும் தோற்கடிக்க, அனைவரும் ஒற்றுமையுடன் இருக்க வேண்டும் என்று பிரதமர் திரு. நரேந்திர மோடி நாட்டு மக்களுக்கு அழைப்பு விடுத்துள்ளார்.

இந்தியாவில், உள்கட்டமைப்பு, உலகதரம் வாய்ந்ததாக மேம்படுத்தப் பட்டுள்ளதாக, திருவனந்தபுரத்தில் நடைபெற்ற மிஷன் 2026 மாநாட்டில் மத்திய உள்துறை அமைச்சர் திரு அமித் ஷா கூறியுள்ளார்.

புதுடெல்லியில் இன்று காலை நடைபெற்ற 56ஆவது Fit india நிகழ்ச்சியில், மத்திய இளைஞர் நலன் மற்றும் விளையாட்டுத் துறை அமைச்சர் டாக்டர் மன்சுக் மாண்டவியா பங்கேற்றார்.

EOS N1 புவி கண்காணிப்பு செயற்கைக் கோள், PSLV C-62 ராக்கெட் மூலம் விண்ணில் செலுத்துவதற்கான 24 மணி நேர கவுண்ட் டவுன், தற்போது நடைபெற்று வருகிறது.

இத்துடன் இந்த செய்தி அறிக்கை நிறைவு பெறுகிறது